1st March 1965]

திட்டங்களின் பெயர்களும் அவற்றை சேர்ந்த பஞ்சாயத்து யூனியன்களின் பெயர்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

திட்டத்தின் பெயர்.	பஞ்சாயத்து யூனியன் பெயர்.
நாங்குனேரி—திருநெல்வேலி மாவட்டம்	
	வள்ளியூர்
	ராதாபுரம்
	நாங்குனேரி
	களக்காடு
ஓமலூர்—சேலம் மாவட்டம்	
	கடயம்பட்டு
	ஓமலூர்
	தாராமங்கலம்
	மேச்சேரி
	குளத்தூர்
	நங்கவள்ளி
ஸ்ரீபெரும்புதூர்—செங்கற்பட்டு மாவட்டம்	
	ஸ்ரீபெரும்புதூர்
	பூவிருந்தவல்லி
	குன்னத்தூர்
	திருவள்ளூர்
	கடம்பத்தூர்
	பூண்டி
	ஊத்துக்கோட்டை

University at Madurai

* 115 *Q.*—SRI V. SANKARAN : Will the hon. the Chief Minister be pleased to state—

(*a*) the steps taken and the preliminary work undertaken till date, for the establishment of the Madurai University; and

(*b*) when it is expected to begin functioning?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) : An expert Committee has been constituted under the Chairmanship of the Director of Public Instruction to work out the details relating to the setting up of the University. The report of the Committee has now beeen received and is under consideration. In the meantime special staff has been sanctioned for acquiring the necessary land expeditiously. Permission has also been accorded for the transfer of the adjacent poromboke land.

திரு. வை. சங்கரன்: நான்காவது ஐந்தாண்டு திட்டக் காலத்திலே புதிதாக யூனிவர்சிடிகள் திறக்க எந்த இடத்திலும் அனுமதிக்கப் போவதில்லை என்று சொல்லப்படுவது வாஸ்தவமா? அப்படி என்றால், மூன்றாவது திட்ட காலத்திலேயே மதுரையில்

இந்த யூனிவர்சிடியைத் துவங்குவதற்கு எல்லாவித நடவடிக்கைகளும் எடுக்க சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த விடை தயாரிக்கப்பட்ட பிறகு அந்தக் கமிட்டியாருடைய அறிக்கை வந்துவிட்டது. இந்த மசோதா தயாரிக்கப் பட்டுவருகிறது, நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திலேகூட—கனம் உறுப்பினர் அவர்கள் கவனித்திருப்பார்கள். அநேகமாக புது யூனிவர்சிடியே வேண்டாம் என்று இருக்கிறது. விதிவிலக்கு இருக்கலாம். மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்திலேயே மதுரைப் பல்கலைக் கழகத்தைப்பற்றிய ஒரு முடிவு எடுத்துக்கொள்ளப்படும்.

SRI R. V. SWAMINATHAN : May I know from the Hon. Chief Minister whether the Government will consider the suggestion made on the floor of this House that the University which is to be started in Madurai should be called the Pandiya or Pandiyan University?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I would personally prefer the name Madurai University. But I am not against 'Pandiyan'. All that will be considered when the Bill is drafted and the draft Bill is before the House

திரு. வை. சங்கரன் : இந்த யூனிவர்சிடியானது யூனிடரி டைப்பாக இருக்குமா ? பெடரல் டைப்பாக இருக்குமா ? காம்பஸிட் டைப்பாக இருக்குமா ? அபிலியேடெட் டைப்பாக இருக்குமா ? இதிலே எந்தவிதமாக இருக்கும் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது சென்னைப் பல்கலைக்கழகம் எப்படி இருக்கிறதோ, அதே மாதிரி இருக்கலாம் என்பதுதான் உத்தேசம். அது அபிலியேட் பெடரல் டைப்பாக இருக்கும். மசோதா தயாரிக்கப்படுகிறபோது இந்த விவரங்களைப்பற்றியெல்லாம் முடிவு செய்யப்படும்.

திரு. எம். எஸ். செல்வராஜன் : உத்தேசப் பல்கலைக்கழகத்தோடு எந்த எந்த ஜில்லாக்களிலுள்ள கல்லூரிகளை இணைக்க உத்தேசம் என்றாவது சொல்ல முடியுமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த அறிக்கையிலே சில சிபார்சுகள் வந்திருக்கும் என்று நினைக்கிறேன். அதை நான் பார்க்கவில்லை. ஆனால், மசோதா தயாரிக்கப்படுகிறபோது, எந்த எந்த ஜில்லாக்களிலுள்ள கல்லூரிகளை இதிலே சேர்த்துக்கொள்வது என்பது பற்றி முடிவு செய்யப்படும்.

MR. SPEAKER : As the hon. Members who have given notice of questions 116 to 120 are not in their seats, the questions and answers will be printed in the proceedings.

Power-looms Enquiry Committee

*116 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the recommendations of the 'Power-looms Enquiry Committee' were examined by the Government;